

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணி யன் நேற்று முன்தினம் (07.06.2025) இராசிபுரம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை யில் ஆய்வு மேற்கொண்டார். உடன் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், மாநிலங்களவை உறுப்பி னர்– நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித்த லைவர் கே.ஆர்.என். இராஜேஸ்குமார், மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் ச.உமா உட்பட பலர் உள்ளனர்.



புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தி.மு.க., திருமயம் வடக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் திருமயம் அண்ணா சீரணி கலையரங்கத்தில் நடைபெற்ற முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாள் விழா பொதுக்கூட்டத்தில் கழக துணைப் பொதுச் செயலாளர் திருச்சி என். சிவா எம்.பி. சிறப்புரையாற்றுகிறார். நிகழ்வில் புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர், இயற்கை வளங்கள் மற்றும் சுரங்கத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, டாக்டர் அண்ணாமலை ரகுபதி, ஒன்றியச் செயலாளர்கள் அழகு சிதம்பரம், ஆர்.கணேசன் மற்றும் ராம.கருப்பையா, கே.ஆர்.ராமசாமி, இரா.மேகநாதன், பி.எல்.கரிகாலன், சுப.துரைராஜா, சுப.செம்பையா மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### நாமக்கல் மாவட்ட

# அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் - அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆய்வு!

## இராசிபுரம் – அனைப்பாளையம் பகுதியில் கட்டப்பட்டு வரும் – மாவட்ட தலைமை மருத்துவமனையையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்!

நாமக்கல், ஜுன் 10 -

நாமக்கல் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை மற்றும் இராசிபுரம் நகராட்சி, அனைப்பாளை யம் பகுதியில் புதிதாக கட் டப்பட்டு அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை ஆகியவற்றை 07.06.2025 அன்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிர மணி யன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா, ஆகி யோர் தலைமையில், மாநி லங்களவை உறுப்பினர் / நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர் கே.ஆர்.என்.இராஜேஸ்கு மார், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.ராமலிங்கம் ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

அதன் பின்னர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தி யாளர்களிடம் தெரிவித்ததா வது:-

நாமக்கல் மாவட்டத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார் பில் நாமக்கல், சேந்தமங்க லம், ராசிபுரம் ஆகிய 3 சட்ட மன்ற தொகுதிகளில் 5 இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகா தார நிலையங்களுக்கு தேவையான புதிய கட்டிடங் கள் என ரூ.2.96 கோடி மதிப் பீட்டில் முடிவுற்ற 5 திட்டப் பணிகள் திறந்து வைக்கப் பட்டுள்ளது.

மேலும், நாமக்கல், பர மத்தி வேலூர், திருச்செங் கோடு, சேந்தமங்கலம், இரா சிபுரம் ஆகிய தொகுதிகளுக் குட்பட்ட பகுதிகளில் ரூ.8.30 கோடி மதிப்பில் 13 புதிய திட்ட பணிகளுக்கு அடிக்கல் நாட்டப் பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ரூ.1,018 கோடி மதிப்பீட்டில் 19 இடங்களில் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளுக்கும், 6 இடங்களில் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைக ளுக்கு இணையான மருத்துவ மனைகள் என்கின்ற வகையி லும் 25 மருத்துவமனைகளை கட்டும் பணிகளை தொடங்கி வைத்தார்கள். தமிழ்நாடு முழுவதும், 25 மாவட்டங்களில் அப்பணி கள் நடைபெற்றுக் கொண்டி ருக்கிறது. விரைவில் 26 மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகள் தமிழ் நாட்டில் பயன்பாட்டிற்கு வரவிருக்கிறது.

இராசிபுரம் நகராட்சி, அனைப்பாளையம் பகுதியில் ரூ.53.39 கோடி மதிப்பீட்டில் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை புதிதாக கட் டப்பட்டு வருகிறது. தரைத ளம் உட்பட 6 தளங்களுடன் கட்டப்பட்டு வருகிறது. இதில் தரை தளத்தில் பாத சிகிச்சை, எக்ஸ்ரே, ஆய்வகம், ஸ்கேன் அறை, புற நோயாளி கள் ஊசி செலுத்துமிடம் உள் ளிட்ட பிரிவுகளும், முதல் தளத்தில் விபத்து மற்றும் தீவிர சிகிச்சை பிரிவு, ஆண், பெண் புற நோயாளிகள் பிரிவு, முடவியல், கண், பல், காது, குழந்தை மருத்துவம் உள்ளிட்ட பிரிவுகளும், இரண்டாம் தளத்தில் அவசர கால மகப்பேறு குழந்தை பராமரிப்பு, பதிவறை, காத்தி ருப்பு அறை, மருந்தகம், முன் பேறுகால பிரிவு, பிரசவ அறை உள்ளிட்ட பிரிவு களும், 3-ஆம் தளத்தில் தீவிர சிகிச்சை பிரிவு, இருதய கண் காணிப்பு, பிறந்த குழந்தை பராமரிப்பு, 4-ஆம் தளத்தில் கவனிப்பு அறை, குழந்தை மருத்துவம், பொது மருத்து வம், ஆண், பெண் அறுவை சிகிச்சை பின் கவனிப்பு அறை, மருந்தகம், மயக்க மருந்து நிபுணர், 5-ஆம் தளத் தில் மருத்துவர்கள் அறை, செவிலியர்கள் அறை, டயா லிசிஸ் அறை, இரத்த வங்கி, மருந்துகள் அறை, பெண்கள் பொது மருத்துவம், 6-ஆம் தளத்தில் கண் மருத்துவம், ஆண்கள் பொது மருத்துவம் உள்ளிட்ட பல்வேறு சேவை களுடன் கட்டப்பட்டு வருகி றது.

மேலும் கூடுதல் கட்டிடத் தில் தண்ணீர் தொட்டி, சமை யல் கூடம், உயிர் மருத்துவக் கழிவு அறை, பிரேத பரிசோ தனை கூடம் ஆகியவை கட் டப்பட்டு வருகிறது. சுமார் 50 சதவீத அளவில் பணிகள் முடிவு பெற்றுள்ளது.

250 படுக்கைகள் கொண்ட பல்வேறு சிறப்பு பிரிவுகளை உள்ளடக்கிய மிகப்பெரிய பிரம்மாண்ட மான மருத்துவமனை உரு வாகி வருகிறது. மருத்துவம னையின் கட்டுமானப்பணி கள் ஆய்வு மேற்கொள்ள ப்பட்டது. தமிழ்நாடு முதல மைச்சர் அவர்களால் விரை வில் மக்கள் பயன்பாட்டிற்கு வழங்கப்படவுள்ளது.

அதேபோல 700 படுக்கை வசதிகள் கொண்ட நாமக்கல் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், ஆய்வுக்கூடம், இரத்தம் சேக ரிப்பு மையம், திருநங்கை க ளுக்கான சிறப்பு சிகிச்சை மையம், பச்சிளம் குழந்தை மையம், தீவிர சிகிச்சை பிரிவு உள்ளிட்ட பிரிவுகள் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இம்மருத்துவமனை நாள்தோறும் சுமார் 1,600 புற நோயாளிகளும், 500க்கும் மேற்பட்ட உள்நோயாளிக ளும் மருத்துவ சேவை பெற் றுக் பயனடைந்து வருகின்ற னர். மேலும், டயாலிசிஸ் போன்ற சேவைகள் வழங்கப் பட்டு வருகிறது.

எம்.ஆர்.ஐ.,சி.டி ஸ்கேன், டிஜிட்டல் எக்ஸ்ரே போன்ற பல்வேறு அதிநவீன மருத்துவ உபகரணங்களுடன் மருத்து வக் கல்லூரி மருத்துவமனை மிகச்சி றப்பாக செயல்பட்டு வருகிறது. மருத்துவ துறையை பொறுத்தவரை நாமக்கல் மாவட்டம் தன்னி றைவு பெற்ற மாவட்டமாக உருவாக்கும் பணிகள் முழுமை பெறும் தருவாயில் உள்ளது. விரைவில் நாமக்கல் மாவட்டத்தில் 2 அரசு மாவட்ட தலைமை மருத்துவ மனைகள் பல்வேறு சிறப்பு வசதிகளோடு திகழவி ருக்கி றது.

இவ்வாறு மருத்துவம் மற் றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணி யன் தெரிவித்தார்.

இந்த ஆய்வில் நாமக்கல் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை முதல்வர் மரு.கே. சாந்தா அருள்மொழி, இணை இயக்குனர் (மருத்துவப்பணி கள்) மரு.அ.ராஜ்மோகன், மாவட்ட நல அலுவலர் மரு.க.பூங்கொடி உட்பட தொடர்புடைய துறை சார்ந்த அலுவலர்கள் உடனி ருந்தனர்.

### நாட்டின் வளர்ச்சிக்கு வித்திட்ட - தமிழ்நாடு உள்ளிட்ட

# மாநிலங்களின் பிரதிநிதித்துவத்தை குறைக்க சதி!

## ஒன்றிய அரசின் மீது - தமிழச்சி தங்க பாண்டியன் எம்.பி. குற்றச்சாட்டு!

சென்னை, ஜுன் 10 -

மக்கள் தொகையை கட் டுப்படுத்தாத பாஜக ஆளும் மாநிலங்களின் எம்.பிகளின் எண்ணிக்கையை அதிக ரித்து தமிழ்நாடு உள்ளிட்ட மக்கள்தொகையைக் கட் டுப்படுத்தி நாட்டின் வளர்ச் சிக்கு வித்திட்ட மாநிலங்க ளின் அரசியல் பிரதிநிதித்து வத்தைக் குறைக்க சதி செய் கிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு என்று தென்சென்னை நாடாளு மன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் குற்றச்சாட்டி அறிக்கை வெளி யிட்டுள்ளார். அவ ரது அறிக்கை வருமாறு:-



ஒன்றிய பா.ஜ.க. அரசு மக் களாட்சி என்ற மகத்தான அரணை புல்டோசர்களைக் கொண்டு இடித்து தள்ளி நாசம் செய்யும் செயல்க ளைத் தொடர்ந்து செய்து வருகிறது. எந்தவித விவா தங்களுமின்றி மக்களைப் பாதிக்கும் சட்டங்களைக் கொண்டு வருவது, சர்வாதி கார போக்கோடு மாநிலங் களை வஞ்சிப்பது தொடர் கதையாகி வருகிறது. அதன் உச்சமாக அவர்கள் நிறை வேற்றத் துடிப்பதுதான் 2027 மக்கள்தொகை அடிப் படையில் மேற்கொள்ள இருக்கும் மக்களவைத் தொகுதி மறுவரையறை.

84ஆவது அரசியலமைப் புச் சட்டத் திருத்தத்தின்படி 2026க்கு பின் எடுக்கப்படும் மக்கள்தொகை கணக்கெ டுப்பு அடிப்படையில் தொகுதி மறுவரையறையை மேற்கொள்ள வேண்டும். இதை நிறைவேற்றி மக்கள் தொகையை கட்டுப்படுத் தாத பா.ஜ.க. ஆளும் மாநி லங்களின் MPகளின் எண் ணிக்கையை அதிகரித்து தமிழ்நாடு உள்ளிட்ட மக் கள் தொகையைக் கட்டுப்ப டுத்தி நாட்டின் வளர்ச்சிக்கு வித்திட்ட மாநிலங் களின் அரசியல் பிரதி நிதித்துவத் தைக் குறைக்க சதி செய்கி றது ஒன்றிய பா.ஜ.க. அரசு.

இச்சதியை ஆரம்பத்தி லேயே அம்பலப்படுத்தி , பாதிக்கப்படப் போகும் மாநிலங்களை ஓரணியில் திரட்டி நியாயமான தொகுதி மறைவரையறை மேற்கொள்ள வலியுறுத்தி னார் முதலமைச்சர் அவர் கள். அப்போதெல்லாம் அதனை வீண் பயத்தை உண்டாக்குகிறார் என்று மூடி மறைக்க நினைத்த வர் கள் இப்போது 2027இல் மக்கள்தொகை கணக் கெடுப்பு மேற்கொள்ளப் படும் என அறிவித்தது மூலம் சாயம் வெளுத்து போய் நிற்கிறார்கள்.

கொரோனா காரணமாக 2021இல் எடுக்காமல் விட்ட மக்கள்தொகை கணக்கெடுப்பை 2023இல் எடுத்திருக்கலாம், 2024, 2025இல் எடுத்திருக்கலாம். ஆனால் வேண்டுமென்றே காலம் தாழ்த்தி 2027இல் எடுப்பதன் நோக்கம் ஒன்றே ஒன்றுதான், அது 2027 மக்கள் தொகை அடிப் படையில் MPகளின் எண் ணிக்கையை அதிகரிப்பது மட்டுமே.

இதற்கு என்ன சொல்ல போகிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு? மோடியும் அமித்ஷா வும் என்ன சொல்ல போகி றார்கள்? தமிழ்நாட்டின் MP களின் எண்ணிக்கை குறை யாது என்ற பழைய ஏமாற்று பல்லவியைப் பாடப் போகி றீர்களா? இல்லை Pro rata என்று கதையளந்து ஏமாற்ற லாம் என எண்ணுகிறீர் களா.?

தமிழ்நாட்டு மக்கள் ஒன் றும் முட்டாள்கள் அல்ல. தமிழ்நாட்டின் குரல் வளையை நசுக்கி அரசியல் உரிமைகளற்ற அடிமை களாக மாற்றும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் சதி திட் டத்தை எல்லாம் அறியாத வர்கள் அல்ல. தமிழ்நாட்டு மக்கள் கேட்பது ஒன்றே ஒன்றுதான், திராணி இருந் தால் நாவில் 1 விழுக்கா டேனும் உண்மை இருந் தால் நேர்மையாக பதில் அளியுங்கள்...

2027 மக்கள் தொகை கணக்கெடுப்பு படி தொகுதி மறுவரையறை நடைபெற் றால் நாடாளுமன்றத்தில் 7.18% என்ற தமிழ்நாட்டின் அரசியல் பிரதிநிதித்துவம் குறையுமா? குறையாதா?

இல்லை, தொகுதி மறுவ ரையறை மேற்கொள்ளப் போவதில்லை என்றால் 2026இல் காலாவதியாகும் சட்டத்திருத்தத்திற்கு மாற் றாக மக்கள்தொகை அடிப் படையிலான தொகுதி மறு வரையறையைத் தள்ளி வைக்கும் சட்ட த்திருத்தம் எப்போது கொண்டுவரப்ப டும்?

பதில் சொல்லுங்கள் அமித்ஷா.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட் டுள்ளார்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாளை முன்னிட்டு சேலம் கிழக்கு மாவட்டம் பெத்த நாயக்கன் பாளையம் மத்திய ஒன்றிய தி.மு.க. சார்பில் கழகக் கொடியேற்றி கலைஞர் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி அன்னதானத்தை மத்திய ஒன்றிய செயலாளர் தங்க மருதமுத்து வழங்கினார். இந்நிகழ்ச்சியில் பேரூர் செயலாளர் வெங்கடேசன், பொதுக்குழு உறுப்பினர்கள் மனோகரன், முத்துலிங்கம் மற்றும் ஒன்றிய, பேரூர் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### 82 ஆண்டுகளுக்கு பிறகு அரியலூர் அருள்மிகு ஆலந்துறையார்

# கோதண்டராமசாமி திருக்கோயில் திருத்தேர் வெள்ளோட்டம்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்!

அரியலூர், ஜுன் 10 -

அரியலூர் மாவட்டம், அரியலூர் நகராட்சியில் இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாடிலுள்ள ஆலந்துறையார் கோதண் டராமசாமி திருக்கோயில் 82 ஆண்டுகளுக்கு பிறகு நிர்மாணிக்கப்பட்ட புதி யத்தேரினை தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற் றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பொதுமக்களுடன் சேர்ந்து வடம் பிடித்து இழுத்து திருத்தேர் வெள்ளோட் டத்தினை துவக்கி வைத் தார்.

இவ்விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, அரிய லூர் சட்டமன்ற உறுப்பி னர் கு.சின்னப்பா ஆகி யோர்கலந்துகொண்டனர்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் உத் தரவிற்கிணங்க, அரியலூர் மாவட்டம் மற்றும் நகர் ஆலந்துறையார் கோதண் டராமசாமி திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாடிலுள்ள திருக்கோயில் புதிய திருத் தேர் திருப்பணி யானது ரூ.18.60 இலட்சம் மதிப் பீட்டில் மேற்கொள்ளப் பட்டு, திருத்தேர் வெள் ளோட்டமானது இன் றையதினம் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற் றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்து செய்தியா ளர்களுக்கு தெரிவித்ததா வது:

அரியலூர் மாவட்டம் அருள்மிகு ஆலந்துறையார் கோதண்டராமசாமி திருக்கோயில் தேரானது 82 ஆண்டுகளுக்குப் பிறகு இன்று வெள்ளோட்டம் விடப்பட்டுள்ளது. முன்ன தாக இருந்த தேர் சேதம டைந்த நிலையில் புதிய தேர் நிர்மாணிக்கப்பட்டு இந்து சமய அறநிலையத்து றையின் சார்பில் அதற் கான நிதிகள் ஒதுக்கப்பட் டது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு முழுவதும் உள்ள கோவில்களில் கும் பாபிஷேகம் நடத்துவது மற்றும் தேர் வெள்ளோட் டம் விட வேண்டும் என்று உத்தரவிட்டிருந்தார் அதன் அடிப்படையில் இன்று அரியலூர் மாவட்டம் அருள்மிகு ஆலந்துறையார் கோதண்டராமசாமி திருக்கோவிலில் தேர் வெள்ளோட்டம் விடப் பட்டிருக்கிறது.

தமிழ்நாடு முழுவதும் 3000 திருக்கோவில்களில் குடமுழுக்கு விழா நடத் தப்பட்டு இருக்கின்றது என்ற நற்செய்தி வந்த நிலையில் அரியலூர் மாவட்ட மக்கள் நீண்ட நாட்களாக ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டி ருந்த அருள்மிகு ஆலந்து றையார் கோதண்டராம சாமி திருக்கோவில் தேர் வெள்ளோட்டம் விடப் பட்டிருக்கிறது. கடந்த மாதத்தில் இதேபோன்று ஒப்பில்லாத அம்மன் கோவில் திருத்தேரும் சுமார் 80 ஆண்டுகளுக்குப் பிறகு தேர் புதுப்பிக்கப் பட்டு வெள்ளோட்டம் விடப்பட்டுள்ளது. இன்று இந்து சமய அறநிலையத்து றையின் மூலமாக ரூ.18.6 லட்சம் செலவில் அருள் மிகு ஆலந்துறையார் கோதண்டராமசாமி திருக்கோவில் தேர் மறுசீர மைக்கப்பட்டு ஓட்டப்பட் டுள்ளது. மேலும் தேர் கொட்டகை அமைக்கும் பணி ரூ.24.20 லட்சத்தில் அமைக்கப்பட உள்ளது. இதற்காக அரியலூர் மக் கள் மிகவும் மகிழ்ச்சியுடன் வரவேற்று தேர் வெள் ளோட்டம் விடும் நிகழ்வினில் மகிழ்ச்சியுடன் ஈடுபட்டுள்ளனர். மாண்பு மிகு தமிழ்நாடு முதலமைச் சர் மு.க.ஸ்டாலின் அவர் கள் இந்து சமய அறநிலை யத்துறையின் மூலமாக மக் களின் ஆன்மீக ஆவலை தீர்க்கும் வகையில் இப்ப ணிகளை நிறைவேற்றி யுள் ளார். இந்து சமய அறநிலை யத்துறை அமைச்சர் கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு நாகப்பட்டினம் மாவட்டத்தில் நடை பெற்ற 3000 ஆவது கும்பா பிஷேகத்தில் கலந்து கொண்டுள்ளார்.

திருவாரூரில் முத்தமி ழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களால் ஆழித்தேர் எப்படி ஓட்டப்பட்டதோ அது போன்று தமிழக முழு வதும் இந்து சமய அறநி லைத்துறையால் அதிக அள வில் கும்பாபிஷேகம் மற்றும் தேரோட்டங்கள் மாண்புமிகு தமிழக முதல மைச்சர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களின் உத் தரவின் பெயரில் தற்பொ ழுது நடைபெற்று வரு கின்றது

என தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித் தார்.

மேலும், திருத்தேர் சித லமடைந்து இருந்ததால் தமிழ்நாடு அரசின் உத்தர வின்படி சென்னை ஆணை யர் அவர்களால் ரூ.18.60 இலட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டு ஆணையர் பொது நலநிதி மூலம் ரூ.15.50 இலட்சம் மற்றும் பொது மக்கள் நன் கொடை நிதி மூலம் ரூ.3.10 இலட்சத்தில் புதிய திருத் தேர் திருப்பணி செய்து கொள்ள நிர்வாக அனுமதி மற்றும் மதிப்பீடு அங்கீகா ரம் வழங்கப்பட்டது.. பின் னர் புதிய திருத்தேரை பாதுகாக்கும் பொருட்டு ரூ.24.20 இலட்சத்திற்கு புதிய திருத்தேர் பாது காப்பு கொட்டகை அமைக்கும் பணிக்கு ஆணையர் பொது நலநிதி மூலம் செய்து கொள்ள நிர் வாக அனுமதி மற்றும் மதிப்பீடு அங்கீகாரம் வழங் கப்பட்டுள்ளது. மேலும், இத்திருத்தேர் வெள் ளோட்டமானது அதாவது இந்தியா சுதந்திரம் பெறுவ தற்கு முன்பு (1942) நடை பெற்றதாக தெரியவருகி றது. அதன் பிறகு சுமார் 82 ஆண்டுகளுக்கு பிறகு இன் றையதினம் சிறப்பாக நடைபெற்றது.

இவ்விழாவில், அரிய லூர் நகர்மன்ற தலைவர் சாந்தி கலைவாணன், அரிய லூர் வருவாய் கோட்டாட் சியர் கோவிந்தராஜன், வட்டாட்சியர் (அரியலூர்) முத்துலெட்சுமி,மாவட்ட துணை செயலாளர் சி.சந்தி ரசேகரன், நகர செயலாளர் இரா.முருகேசன், ஒன்றிய பொறுப்பாளர்கள் கோ.அறிவழகன், மா.அன் பழகன், இளையராஜா, பொதுக்குழு உறுப்பினர் இரா.பாலு, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயி கதிரவன், நகராட்சி துணை தலைவர் கலியமூர்த்தி, மற் றும் கழக நிர்வாகிகள் இரா ஜேந்திரன், குணா,குமார், இராமு, பொதுமக்கள் மற் றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கு. இராதாமணி
**ஜுன் 10 (2019)**



கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு, திருமணம் செய்யாமலேயே கழகப் பணியாற்றியவர்.

கலிஞ்சிக்குப்பம் கிளைக் கழகச் செயலாளராக, பின்னர் ஆறு முறை கண்டமங்கலம் ஒன்றியக் கழகச் செயலாளராக – விழுப்புரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளராகவும் – விழுப்புரம் மத்திய மாவட்ட அவைத் தலைவராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

விழுப்புரம் மாவட்ட அறங்காவலர் குழுத் தலைவர் – மாவட்ட ஒழுங்குமுறை விற்பனைக்கூடத் தலைவர் என பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**